# ஓர் நூறாண்டு தொலை நோக்கு; எண்பதாண்டு சாதனை!

தென்னிந்தியாவில் அந்த காலத்தில் இருந்தே கடல் வழி வாணிபம் சிறந்து விளங்கியது. சங்க காலம் மற்றும் சேர, சோழ, பாண்டியர் ஆட்சியின் போதும் 'கொற்கை' என்ற துறைமுகம் முத்துக்கு பேர் பெற்றது. இதுவே பிற்காலத்தில் " முத்து நகர்" என அடைமொழி பெற்ற தூத்துக்குடியாகும்.

தொழிற் துறையில் இன்று முன்னேற்றம் கண்டிருக்கும் தூத்துக்குடியின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம் அங்குள்ள துறைமுகம். இன்று இந்த துறைமுகம் இவ்வளவு வளர்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தவர் திரு. திரவியரத்தினம் அவர்கள்.

20ஆம் நூற்றாண்டின் முன்பகுதியில் திரு.PSTS சங்கரலிங்க நாடார் கடல்மார்க்கமாக பருப்பு, சீனி வியாபாரத்தை மேற்கே கராச்சி முதல் கிழக்கே இந்தோனேஷியா வரை விரித்திருந்தார். 1940ல், தனது 20ஆம் வயதில், தூத்துக்குடி துறைமுகத்திற்கு வரும் கப்பலில் சரக்குகளை ஏற்றுவதும், பின் அவற்றை வாடிக்கையாளர்களிடம் பத்திரமாகக் கொண்டு சேற்கும் 'கடல்சாற் லாஜிஸ்டிக்ஸ்' செய்யும் நிறுவனமான PSTS & Sons ஐ துவங்கி பின்னர் அது PSTS லாஜிஸ்டிக்ஸ் என பெயர் பெற்றது.

"அந்த காலத்தில் தூத்துக்குடி துறைமுகத்தின் ஆழம் குறைவானதால், பெரிய கப்பல்கள் வர இயலாது. அவை துறைமுகத்திலிருந்து 6 மைல் தள்ளியே நடுக்கடலில் நின்று விடும். கப்பலில் ஏற சிறப்பு வழிகள் கிடையாது . கயிற்றைப் பிடித்துதான் ஏற வேண்டும்; அலைகள் சீற்றமாக இருந்தால் சரக்கை இறக்குவது கஷ்டம்; சில சமயம் சரக்கு கடலில் விழுந்துவிடும்!" என என் தந்தையார் எங்களிடம் கதைகள் கூறக் கேட்டுள்ளோம் என நினைவு கூர்ந்தார் அவரது இரண்டாவது மகன் PSTS T. உதயசங்கர். இவர் தற்பொழுது PSTS லாஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் சேர்மன் கம் மேனேஜிங் டைரக்டர் ஆவார்.

1958 ஆம் ஆண்டு தூத்துக்குடி, மதுரை,ராம நாதபுரம், திரு நெல்வேலி சுத்துப்புறம் உள்ள எல்லா கப்பல் தொழில் செய்பவர்கள் சேர்ந்து " தூத்துக்குடி துறைமுக வளர்ச்சி கழகத்தை" துவக்கினர். இதன் காரியதரிசியாக திரு PSTS திரவியரத்தினம் நியமிக்கப் பட்டார். 20 பேர் கொண்ட இந்தக் குழு டெல்லி சென்று பிரதமர் ஜவஹர்லால் நேருவை சந்தித்து துறைமுகத்தை விரிவுபடுத்தும் மனுவைக் கொடுத்தனர். பிரதமரும் அந்தக் கோரிக்கையை உடனே எற்று நிதி ஒதிக்கியபின் 1974ல், இந்தியாவின் ஒரு முக்கியமான துறைமுகமாக மாறியது. இங்கே முதல் முதலாக வந்த பெரிய கப்பலான ' சென்னை ஊக்கம்' மின் கயிற்றை இழுத்துக் கட்டியப் பெருமை திரு. திரவியரத்தினத்திற்கு உண்டு!

பின்னர் 1979ல் பழைய- புதிய துறைமுகங்களை இணைத்து 'தூத்துக்குடி போர்ட் டிரஸ்ட்' உருவானது.

பெரிய கப்பல்கள் வர ஆரம்பித்ததிலிருந்து, தூத்துக்குடியில் ஸ்பிக், ஸிப்காட், அனல்மின் நிலையம் என பல தொழிற்சாலைகள் உருவாக ஆரம்பமானது.

1960ளில் திரு.திரவியரத்தினம் திரு. J. வில்பிரட் பெர்னாடொ என்பவருடன் சேர்ந்து சரக்கு கொள்முதல் சேவையை பழைய துறைமுகத்தில் தொடங்கினார்.

1970களின் நடுவில் தூத்துக்குடியிலிருந்து சிங்கப்பூருக்கு ஒரு லட்சம் டன்

உப்பு ஏற்றுமதி சரக்கை கையாண்டது PSTS லாஜிடிக்ஸ் நிறுவனமே ஆகும்.

திரு.திரவியரத்தினம் 1979-1991 வரை தூத்துக்குடி துறைமுக டிரஸ்டியாக பணியாற்றினார். பின்னர் 1989-91 வரை திரு.PSTS T. உதயசங்கர் அதே பொறுப்பில் இருந்தார்.

தூத்துக்குடி துறைமுக வளர்ச்சிப்பணியை செவ்வனே செய்த திரு. திரவியரத்தினத்தை இந்திய அரசு பலமுறை கௌரவித்தது. 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், தூத்துக்குடி துறைமுகத்தின் புதிய பெர்த் எண் 9 அடிக்கல் நாட்டு விழாவில், கப்பல் துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு முன்னிலயில் அப்பொழுது தூத்துக்குடி சேர்மனாகப் பணியாற்றிய திரு.NK ரகுபதி அவர்கள் திரவியரத்தினத்திற்கு 'தூத்துக்குடி துறைமுக தந்தை' எனப் பட்டம் வழங்கினார்.

"துறைமுக துறையில் ஒரு "லெஜெண்டாக" திகழ்ந்தவரின்

உயிர் ஜூன் 17ஆம் தேதி பிரிந்தது. அவர் ஆன்மாவின் ஆளுமை இன்றுவரை எங்களை வழி நடத்துகிறது!" என்கிறார் திரு.திரவியரத்தினத்தின் மூத்த பேரனும், PSTS லாஜிஸ்டிக்ஸ் நிறுவன CEO திரு. கணேஷ் ராம்.

கடந்த 80 ஆண்டுகளாக PSTS லாஜிஸ்டிக்ஸ் நிறுவனம் பல்க், ப்ரேக்-பல்க், கண்டேனர் மூலம் கரி, பல்வேறு உரங்கள், கெமிக்கல்கள்,ஸ்டீல் பிளேட்டுகள் மற்றும் காயில்கல், காற்றலை மின்விசிறிகள், இரயில் பெட்டிகள் போன்ற பலதரப்பட்ட சரக்குகளை தெற்கே தூத்துக்குடி முதல் காரைக்கால், காட்டுப்பள்ளி, எண்ணூர்,கிருஷ்னப்பட்டினம், வடக்கே தாம்ரா வரை மற்றும் மேற்கே கோவா துறைமுகத்தில் வேற்றிகரமாக செயலாற்றி வருகிறது.

PSTS லாஜிஸ்டிக்ஸ் சரக்கு கொள்முதல் திறனிலும், வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெற்றதால் ஐந்து முறை தொடர்ச்சியாக " ஸ்டீவிடோர் ஆப் த இயர்" அவார்ட், சர்வதேச பிரைட் பார்வர்டிங் அவார்ட், ஸ்மால்/ மீடியம் பிஸினஸ் கௌரவ் அவார்ட், சிறந்த பிஸினெஸ் குடும்பம் அவார்ட் மற்றும் பல துறைமுக டிராபிக் விருதுகளும் வருடா வருடம் குவிந்த வண்ணம் உள்ளன.

இன்றய சமூகப் பொருளாதார வளர்ச்சி மட்டுமின்றி, நாளைய தலைமுறைக்கும் தன் சேவையை விரித்து திரு. திரவியரத்தினம் தனது 3 மகன் களுடன் சேர்ந்து PSTS பௌண்டேஷன் என்ற பப்ளிக் டிரஸ்டை நிறுவினார்.தற்பொழுது இதன் மேனேஜிங் டிரஸ்டியாக திரு PSTS T உதயசங்கர், மற்றும் இதர டிரஸ்டிகளாக திரு PSTS T வேல்சங்கர் & திரு PSTS TJ கணேஷ் ராம் உள்ளனர்.PSTS தொழிற்சார் பயிற்சி மையத்தில் நலிந்த/ஏழை இளைஞர்களுக்கு கிரேன், JCB, போர்க் லிப்ட் ஆபரேட்டர் பயிற்ச்சியளித்து, வேலை வாயிப்பும் அளிக்கப்படுகிறது. PSTS பௌண்டேஷன் நடத்தும் 'சுந்தரம் ஸ்மைல் ஸ்கூல்' இளம் சிறார்களுக்கு முதல் கல்வி அனுபவத்தையும், திரு PSTS T வேல்சங்கர் மேற்பார்வையில் 'விகாஸா ICSC பள்ளியும், விகாஸா சர்வதேச IGCSC பள்ளியும், விகாஸா ஆசிரியர் பயிற்சி பள்ளியும் இயங்குகின்றன.

திரு. திரவியரத்தினத்தின் 100 ஆவது பிறப்பு நினைவு தினத்தை ஒட்டி ஓய்வுபெற்ற IAS அதிகாரிகளான திரு மச்செந்திர நாதன் ( ex-Chairman, Tuticorin Port Trust), திரு NK ரகுபதி ( ex-Chairman, Tuticorin Port Trust) மற்றும் பலரிடமிருந்து வாழ்த்துகள் குவிந்த வண்ணம் உள்ளன!